# மறைவானது ஒன்றுமில்லை

**அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை; சகலமும் அவருடைய கண்களுக்குமுன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது (எபி 4:13)**




கர்த்தருக்கு மறைவானது ஒன்றுமில்லை என்று வேதாகமம் கூறுகிறது. ஆம் அவருக்கு மறைவானது, தெரியாதது, உணர்ந்து கொள்ள முடியாதது என்று எதுவும் இல்லை. யாவும் அவருக்கு முன்பாக வெளியரங்கமாய் இருக்கிறது. இதற்கு காரணம் அவரே எல்லாவற்றையும் சிருஷ்டித்து ஆண்டு நடத்துகிறார். ஒவ்வொரு தனிமனித வாழ்வை குறித்தும், பூமியிலுள்ள எண்ணிறைந்த ஜீவராசிகளின் ஒவ்வொரு அசைவை குறித்தும், அண்ட சராசரங்களின் இரகசியங்களையும் அவர் அறிவார். நட்சத்திரத்தை பெயரிட்டு அழைக்கும் தேவன், தன்னை நோக்கிக் கூப்பிடுகிற சிறு காக்கை குஞ்சுகளின் சத்தத்தையும் கேட்கிறார் **(லூக் 12:24)**. சமுத்திரத்தில் விளையாடி மகிழும் திமிங்கலங்கள் அவரை நோக்கி பார்க்க அவைகளை போஷிக்கிறார் **(சங் 104:25-28)**. இன்றைக்கு தோன்றி நாளைக்கு மறைந்து போகிற காட்டு புஷ்பங்களை அழகாய், நேர்த்தியாய், வாசனையாய் மலர செய்கிறார் **(லூக் 12:27)**.

இவை எல்லாவற்றையும் நாம் சற்று சிந்தித்துப் பார்ப்போமானால், ஒவ்வொரு நொடியும் ஜீவனுள்ள மற்றும் ஜீவன் இல்லாத எத்தனையோ காரியங்களை, முக்காலத்தையும் அறிந்தவராய் தம் சித்தபடியே ஆண்டு நடத்தும் தேவனின் அளவுக்கு அடங்காத வல்லமையை நாம் காணலாம். ஆம், சகலவற்றையும் அவர் அறிவார், அறிவது மாத்திரமல்ல அதைத் தம் சித்தப்படியே நடத்துகிறவரும் அவரே. எனவே ஒவ்வொரு நாளும் பூமியில் நடக்கும் எத்தனையோ கொடுமையான காரியங்களையும், மனிதர்களுடைய பொல்லாத இருதயத்தின் செய்கைகளையும், அவர் அறிகிறவராய் இருக்கிறார். முழு உலகத்தையும் அச்சுறுத்திவரும் இக்கொடிய கொரோனா, எப்படி தோன்றியது என்பதையும், எப்பொழுது முடிவடைய வேண்டும் என்பதையும் அவர் அறிவார். அவர் அறிவது மட்டுமல்ல அதை செயல்படுத்துகிறவரும் அவரே. இப்படியிருக்க நம் வாழ்வில் நாம் விடை காணா எத்தனையோ கேள்விகள் இருக்கிறது. நம் வாழ்க்கையில் ஏன் இப்படிப்பட்ட துயர சம்பவங்கள் அனுமதிக்கப்பட்டது, ஏன் இப்படிப்பட்ட கஷ்ட சூழ்நிலைகளைக் கடந்து போகிறோம், இவையெல்லாம் எப்போது முடிவுக்கு வரும் என்று அனேக கேள்விகள் நம்மிடம் உண்டு. என்னுடைய சொந்த அனுபவத்திலும் இதைப் போன்ற எத்தனையோ கேள்விகள் உண்டு. தேவன் இவையெல்லாவற்றையும் நிச்சயமாய் மாற்றுவார். ஆனால் அது எப்போது நடைபெறும் என்பது நமது வாஞ்சையாகும்.

பேதுருவின் மாமி கடும் ஜுரமாய் படுக்கையில் கிடந்த பொழுது அவளை எழுப்பின தேவன் **(லூக் 4:38,39)**, யவீரு மகள் மரித்து அடக்கம் செய்ய ஆயத்தமாகும் வேளையில் செயல்பட்டார் **(லூக் 8:49-56)**. நாயீனூர் விதவையின் மகன் அடக்கம் செய்ய எடுத்துக்கொண்டுபோக படுகையில் உயிர்ப்பித்தார் **(லூக் 7:11-16)**. லாசருவையோ கல்லறையில் வைத்து, நான்கு நாள் முடிந்த பின்னர் எழுப்பினார் **(யோ 11:38-45)**. இங்கு எல்லாருமே சுகத்தை / ஜீவனைப் பெற்றுக்கொண்டார்கள். ஆனால் அது எப்பொழுது என்பதே கேள்வி. எந்த அளவுக்கு ஆண்டவர் நம்மை சில நேரங்களில் காத்திருக்க செய்வார் என்பதை அறியோம். ஆனால் அவர் அதை அறிவார். எந்த அளவுக்கு அல்லது, எந்த காலகட்டம் வரை நாம் அந்தத் துன்பத்தை சகிக்க வேண்டும் என்பதைப் பொறுத்தே நம் ஒவ்வொருவரின் அனுபவமும் மாறுபடுகிறது. ஆனால் அவரோ மாறாதவர், நிச்சயம் இவையெல்லாவற்றிற்கும் ஒரு முடிவுண்டாக்குவார், விடுதலை தருவார். இக்கொடிய கொரோனா நோயினால் பாதிக்கப்பட்டு, சரீரத்தில் பாடனுபவித்து மீண்டோர் உள்ளனர். மரணப் போராட்டம் வரை போராடி மீண்டோர் உள்ளனர். இன்னும் சிலர் மரித்தே விட்டனர். இதனால் சிலருக்கு சில நாள் போராட்டம், சிலருக்கு மரண போராட்டம், சிலரோ அனாதைகளாக்கப்பட்டு நிற்கதியாய் நிற்கின்றனர். இன்னும் சிலர் கொரோனாவால் சரீர அளவில் பாதிக்கப்படாவிட்டாலும், பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டு, வேலையை இழந்து, தொழிலை இழந்து, வாழ்வாதாரத்தை இழந்து, அதனால் வாடுவோர் உண்டு. இதனிமித்தம் மரணத்தை சந்தித்து, நிற்கதியாய் நிற்கும் மக்களும் உண்டு.

இவை எல்லாவற்றையும் நாம் காணும் பொழுது, அன்று இயேசு லாசருவை எண்ணி கண்ணீர் விட்ட பொழுது, **“அப்பொழுது யூதர்கள்: இதோ, இவர் அவனை எவ்வளவாய்ச் சிநேகித்தார் என்றார்கள்! அவர்களில் சிலர்: குருடனுடைய கண்களைத் திறந்த இவர், இவனைச் சாகாமலிருக்கப்பண்ணவும் கூடாதா என்றார்கள்.” (யோ 11:36,37)**, ஆம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம்மோடு சேர்ந்து நம்முடைய துயரமிகுதியால் நாம் அழும் பொழுது அவரும் அழுகிறார். ஆனால் கண்ணீர்விடும் அவரே, இன்னும் சில நேரத்தில் கண்ணீரை ஆனந்த களிப்பாய் மாற செய்வார். எனவே நம்முடைய துன்பங்கள், துயரங்கள், ஏக்கங்கள், வேதனைகள் தேவைகள் எதுவாயிருந்தாலும், அவை எல்லாவற்றையும் அவர் அறிவார், அது எந்த அளவில் நம்மில் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது என்பதையும் அவர் அறிவார். அவருக்கு மறைவானது ஒன்றுமில்லை. அன்று பேதுருவின் மாமியை சுகப்படுத்தின் தேவன், யவீருவின் மகளை மரணத்திலிருந்து எழுப்பின கர்த்தர், நாயீனூர் விதவையின் அழுகையை ஆனந்தக் களிப்பாய் மாற செய்த ஆண்டவர், லாசருவை கல்லறையில் நாறின நிலையிலிருந்தும் மீட்ட நம் மீட்பராகிய இயேசுகிறிஸ்து, நிச்சயம் நம் அழுகுரலையும் கேட்கிறார், அவரே அதை ஆனந்தக் களிப்பாய் மாற செய்வார். அவருக்கு மறைவானது ஒன்றுமில்லை, ஆமென், அல்லேலூயா.